# பழந்தமிழரின் நிமித்தங்கள்

சே. கரும்பாயிரம் / C.Karumbayiram*
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் / Central Institute of Classical Tamil
சென்னை, தமிழ்நாடு / Chennai, Tamil Nadu
sethu.karumbayiram@gmail.com

Manuscript received 21 March 2021
Manuscript accepted 14 April 2021
*Corresponding author/First Author

## Abstract
It was well-established that the ancient Tamil have observed so-called Internal and external way of life adequately. The literary evidence show that in order to gain the meaning of this Internal and external life, one is meant to leave his partner and live in isolation for some reasons for a considerable time period. Hence, journeys became unavoidable, especially for the sake of the war and materialistic purposes in the classical community. Omens were seen to play significant role among in their life as well, especially when the begun their journey or return home. They serve as significant indications to tip when one shall take the journey or shall not. It is known facts that such practices were still practiced by present-day community. There were a lot of instances showing such situations in the classical literatures, showing the importance of Omen. This article offer descriptions and explanations related to the cause of the omens and its developmental trends.

**Keywords: Ancient Tamil, Belief, Omen, Bird**

**ஆய்வுச்சுருக்கம்**
அகமும் புறமும் பண்டைய தமிழரின் வாழ்வியல் நெறியாக விளங்கியது. இந்த அக, புற வாழ்வியலில் பொருள் ஈட்ட வேண்டி, தலைவன் தலைவியை விட்டுப் பிரிய நேர்ந்தது. குறிப்பாகச் சங்கச் சமூகத்தில் போரிடுதல், பொருளீட்டுதல், கற்றல், தூது போன்றவற்றிற்காகப் பிரிதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது. பிரிந்து செல்பவரின் பயணம் இனிதாக அமையவும் பிரிந்து சென்றவர் திரும்பி வருவதற்குரிய காலத்தைக் கடத்தும்பொழுதும் அவர் எப்பொழுது வருவார் என்பதை அறியவும் நிமித்தங்கள் பார்க்கப்பட்டன. அதன் தொடர்ச்சி இன்றளவும் பலர் தாம் மேற்கொள்ளும் முக்கிய செயலுக்குமுன் நிமித்தம் பார்த்தலை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அத்தகைய நிமித்தத்தைப் பழந்தமிழர் எதற்கெல்லாம் பார்த்தனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. நிமித்தம் அவர்களுடைய வாழ்க்கைச் சூழலில் எத்தன்மையில் இடம்பெற்றது என்பதைத் தெரிந்து கொள்வதும் அவசியமாகிறது. எனவே, நிமித்தம் தொடர்பான விளக்கங்களையும் அதன் வளர்ச்சிப் போக்குகளையும் எடுத்துக் கூறுவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**குறிச்சொற்கள்** :பழந்தமிழர், நம்பிக்கை, நிமித்தம், புள்

## முன்னுரை

பழமையான தமிழ்ச் சமூகம் நம்பிக்கைகள், சடங்குகள் ஆகிய பண்பாட்டுக் கூறுகளை மிகுதியாகக் கொண்டுள்ளன. பண்பாடுகளுள் ஒன்றான நம்பிக்கை பல வகைகளாக உள்ளன. அவற்றுள் நிமித்தமும் அடங்கும். நிமித்தம் என்னும் சொல்லுக்குச் சகுனம், ஏது, காரணம், பொருட்டுப் போன்ற பல பொருள்கள் தருவதையும் புள், குறி போன்ற வேறுபெயர்கள் வழங்குவதையும் காணமுடிகிறது. இவற்றுள் சகுனம் என்ற சொல்லுக்குப் பின் நிகழ்வதை முன்னரே அறிதல் என்பது பொருளாகும். தற்காலத்தில் இந்தப் பொருள் தரக்கூடிய சகுனம் என்ற சொல்லே நிமித்தம் என்னும் சொல்லுக்கு இணையாக வழங்கப்படுகிறது. நிமித்தமானது நாள் நிமித்தம், புள் நிமித்தம் எனப் பல வகைகளாக

உள்ளன. அந்நிமித்தங்கள் பழந்தமிழர் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்கியுள்ளன. அவ்வாறான நிமித்தங்களை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நிமித்தத்தின் தோற்றம்**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தொடக்ககால மனித இனத்திற்குப் புயல், இடி, விலங்குகள், சக மனிதர்கள் ஆகியவற்றினால் அச்சுறுத்தல்கள் அதிகமாக இருந்தன. அச்சுறுத்தலானது தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியால்தான் வருகிறது என்று நினைத்தனர். அந்தச் சக்தியிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்தவர்கள் வழிபாடுகள், சடங்குகள் போன்றவற்றைச் செய்தனர். வழிபடுதல், சடங்கு செய்தல் என்னும் இவைபோன்ற பல்வேறு செயல்களை நல்ல நேரத்தில் செய்தால் அவை நன்மையில் முடியும் என்றும் கெட்ட நேரத்தில் செய்தால் தீமையில் முடியும் என்றும் எண்ணினர். இந்த நன்மையும் தீமையையும் முன்னோர்கள் தங்களுடைய அனுபவத்தினால் அறிந்து கொண்டனர். சான்றாக, முன்னோர்கள் செயலை மேற்கொள்ளும் நேரத்தில் பறவையின் ஒலியைக் கேட்டல் அல்லது அது குறுக்கே செல்லுதலைப் பார்த்தல் என்பது ஏதோ தங்களுக்கு அப்பாற்பட்ட சக்தியினால் நிகழ்கிறது என்று எண்ணினர். இந்நிகழ்வானது தனக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை என நினைத்தனர். இதன் காரணமாக அவர்கள் எந்த ஒவ்வொரு செயலையும் நல்ல நேரத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு நிமித்தம் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இவ்வாறான நிமித்தமானது இயற்கையைப் புரிந்துகொள்ள முடியாத வாழ்கையை வாழ்ந்த பண்டைய காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது என்று சொல்ல வேண்டும். ஆனால், தற்காலத்தில் நவீன அறிவியல் வளர்ந்த நிலையில் நிமித்தம் பார்த்துச் செல்வது என்பது இன்றைய காலத்திற்குத் தேவையா? என்று ஆராய்ச்சி செய்யக்கூடிய நிலையில் தான் இருக்கிறோம். எது எவ்வாறாயினும் நிமித்தமானது தற்பொழுதும் மக்களுடைய வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகவே இருக்கிறது.

முன்னோர்கள் நிமித்தத்தைக் கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் தெரிந்து கொண்டனர். பறவை வலமிருந்து இடம்போகுவதைப் பார்ப்பதையும், பறவையின் ஒலியினைக் காதால் கேட்பதையும் இதற்குச் சான்றாகக் கூறலாம். இதில் முதன்மையாக அமைவது காதினால் கேட்டலே ஆகும். காதினால் கேட்டல் என்பது தனக்குத் தூரத்தில் வரும் அச்சுறுத்தலை முன்னரே அறியக் கூடியதாக இருக்கிறது. அதனால் பண்டைய மக்கள் பறவை முதலானவற்றின் குரல் ஒலியை வைத்து நிமித்தத்தை மிகுதியாகப் பார்த்தனர் என்பது தெளிவாகிறது. பறவையின் குரல் ஒலியைக் கேட்டலில் நல்ல நிமித்தமாக இருந்தால் பயணத்தைத் மேற்கொள்வர். அதுவே, தீய நிமித்தமாக இருந்தால் போகும் பயணத்தைத் தவிர்த்துவிடுவார். நிமித்தம் தடை இருந்தும் நிமித்தத் தடையை நீக்கியும் பயணம் மேற்கொள்ளுவதும் உண்டு. எனவே, நிமித்தம் என்பது நன்னிமித்தமாகவும் தீய நிமித்தமாகவும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

நன்னிமித்தம் தீநிமித்தம் வெளிப்படும் விதத்தில் நிமித்தமானது பல வகைகளாக இருந்துள்ளன. அதனைத் தொல்காப்பியம் எடுத்துரைத்துள்ளது. அதாவது, புறத்திணையில் பாடாண் திணையானது ஆண்மகனின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுவதாகும். நாடாளும் மன்னன் பாதுகாப்புடன் நீண்டநாள் வாழ வேண்டும் என்பதற்காக மன்னனிடம் பரிசு பெற்றவர்கள் ஓம்படை கூறுவது மரபாகும். ஓம்படை என்பது மன்னனைப் பற்றிய அச்சத்தைத் தவிர்த்து, நன்மை விளைவிக்கக்கூடிய கருத்துரைகளை வழங்குதல் என்பதாகும். தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த புலவன் ஓம்படை கூறுதலில் மன்னனுக்கான நிமித்தத்தையும் அறிந்து கூறியுள்ளான். அதாவது மன்னனிடம் பரிசுபெற்ற புலவன் அவ்வரசனுக்கு ஓம்படை கூறும்போது நிமித்தத்தால் அறியப்படும் அச்சத்தைப் போக்குமாறும் நன்மைக்கான மகிழ்வை ஏற்படுத்துமாறும் கருத்துரை வழங்கியுள்ளான். புலவன் ஓம்படை கூறுதலில் தொல்காப்பியர் காலத்தில் எவ்வகையான நிமித்தங்கள் இருந்தன என்பதைப் பற்றி,

"அச்சமு முவகையு மெச்ச மின்றி
நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்
காலங் கண்ணிய வோம்படை யுளப்பட" (தொல்.பொருள்.91:16-18)

என்ற நூற்பா அடிகள் எடுத்துரைக்கின்றன. இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ள நாள் என்பது நாள் நிமித்தத்தையும் புள் என்பது பறவை நிமித்தத்தையும் பிறவற்றின் நிமித்தம் என்பது இயற்கை, விலங்குகள், மனிதர்கள் முதலானவற்றின் செயலினால் தோன்றும் பல்வேறு நிமித்தத்தையும் குறிப்பதாகும்.

மற்றொரு நூற்பாவில் தலைவனோடு தலைமகள் உடன்போக்கு மேற்கொள்ளும் நற்றாய் தன்னையும் தலைமக்களையும் எண்ணி நிமித்தம், விரிச்சி, கட்டு, கழங்கு முதலானவற்றைக் கொண்டு நன்மையும் தீமையையும் அறிந்த பின்னர்த் தோழியும் கண்டோரையும் நோக்கிப் புலம்புகிறாள். இதனை,

"தன்னு மவனு மவளுஞ் சுட்டி
மன்னு நிமித்த மொழிப்பொரு டெய்வ
நன்மை தீமை யச்சஞ் சார்தலென்று" (தொல்.பொருள்.36:1-3)

என்னும் நூற்பா அடிகள் கூறியுள்ளன. பழந்தமிழர்களால் பார்க்கப்பட்ட நிமித்தங்களான நாள் நிமித்தம் பார்த்தல், பறவை நிமித்தம் பார்த்தல், உன்னம் பார்த்தல், கட்டுப் பார்த்தல், கழங்கு பார்த்தல், ஆழியிழைத்தல் போன்றவற்றை ஆராய்வோம்.

**நாள் நிமித்தம் பார்த்தல்**

வானிலுள்ள கோள்கள், விண்மீன்களைக் கொண்டு நாள் என்பதைக் கணித்துள்ளனர். நாளில் நல்ல நாளும் கெட்ட நாளும் உண்டு என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். நாட்கள் பற்றி அறிந்து செயல்படும் நிமித்தத்தில் பலவகை உண்டு. அவற்றுள், பிறந்த நாள் பற்றிய நிமித்தமும் ஒன்றாகும். ஒருவர் பிறக்கும் மாதத்தில் எந்த மீன் நிற்கிறதோ அந்நாளே அவர் பிறந்த நாளாகும். இதன் காரணமாகச் சிலரை எந்த மீனில் பிறக்கிறார்களோ அந்த மீன் கொண்டு அழைப்பதுண்டு. சான்றாக ஆதிரையான், உத்திராடத்தான், திருவோணத்தான் என நாள் பெயர்கள் வழங்குவதன்வழி அறியமுடிகிறது.

பிறந்தநாளைக் கொண்டு நிமித்தம் பார்க்கும் பழக்கம் பண்டைய காலந்தொட்டே இருந்துவருகிறது. குறிப்பாக, மன்னர் வாழ்வில் பிறந்த நாளைக் கொண்டு நிமித்தம் பார்த்தலானது தவிர்க்கமுடியாத ஒன்றாக இருந்துள்ளது. அதனாலேயே மன்னரின் பிறந்த நாளைச் சிறப்பிக்கும் விதமாக **'நாண்மங்கலம்'** என்னும் புறத்துறையைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிட்டுள்ளது. மாங்குடி மருதனாரும் பாண்டியன் நெடுஞ்செழியனை, **'நின்று நிலைஇயர்நின் னாண்மீன்'** (சங்க இலக்கியம், 2113, புறம்.24:24) என்னும் பாடலடியில், உன் வாழ்நாட்குரிய நாள் மீன் நின்று நிலைக்கட்டும் என்று புகழ்ந்துள்ளார். இவ்வாறு பண்டைய காலத்தில் பிறந்த நாள் கொண்டு நிமித்தம் பார்த்தலானது இன்றைய காலத்திலும் பிறந்தநாளைக் கொண்டு சாதகம் உருவாக்கி அதன்மூலம் நல்ல நாள், கெட்ட நாளை அறிதலைக் காணமுடிகின்றன.

**பறவை நிமித்தம் பார்த்தல்**

புள் என்பது பறவையைக் குறிக்கும் பொதுச் சொல்லாகும். இச்சொல்லுக்குப் பறவை நிமித்தம் என்ற பொருளுமுண்டு. **'புள்ளுப்புணர்ந் தினிய வாக'** (மேலது, 2234, நற்.136:3) என்ற பாடலடியின் பொருள் பறவை நிமித்தம் பார்த்தனர் என்பதாகும். **'நாளும் புள்ளு நயத்தகு நன்னிலை'** (சீவகசிந்தாமணி, 1775:1) என்ற பாடலடியில் வரும் புள்ளும் என்ற சொல்லுக்குப் பறவையால் அறியும் நிமித்தம் என்ற பொருளைப் பெறமுடிகிறது. **'புள்ளும் வழிப்படர'** (சிலப்பதிகாரம், 12,வேறு, 13:2) என்று கூறும் பாடலடி பறவை நிமித்தமும் ஒத்துப் போக என்னும் பொருளைக் குறிப்பிடுகிறது. எனவே, பறவையின் செயல் தன்மையைக் கொண்டு நிமித்தம் பார்த்தலால் அப்பறவை நிமித்தத்திற்கும் புள் என்னும் பெயர் பெறலாயிற்று. புள் நிமித்தம் பார்க்கும் நிமித்திகர்களும் இருந்துள்ளனர். அவருக்கு மன்னன் பரிசில் வழங்கியதை,

"பொய்யாது புண்மொழிந்தார்க்கு
வையாது வழக்குரைத்தன்று" (புறப்பொருள் வெண்பாமாலை,18)

என்று கூறுவதன்மூலம் விளங்கிக் கொள்ளமுடிகிறது.

காக்கை, ஆந்தை, கருடன், கரிக்குருவி, செம்போத்து முதலான பறவைகள் கொண்டு நிமித்தம் பார்க்கும் பழக்கம் பண்டைக் காலந்தொட்டே இருந்து வருகிறது. பொதுவாகப் பறவைகளின் குரல் ஒலி, அவை பறந்து செல்லுதல் ஆகியவற்றைக் கொண்டு நிமித்தமாகப் பார்த்துள்ளனர்.

பறவையின் குரல் ஒலி நிமித்தத்திற்குக் காக்கை, ஆந்தை, கரிக்குருவி போன்றவற்றைக் குறிப்பிடலாம். காக்கை கரைந்தால் புதிய விருத்தினர் வருவர் என்னும் நன்னிமித்தத்தைக் குறுந்தொகை 210ஆம் பாடல் தெரிவிக்கிறது. அதுபோலக் காக்கை கரைந்தால் தீய நிமித்தமாகக் கருதப்பட்டதை, **'காக்கைகள், எதிரெதிர் சிலம்பின'** (சூளாமணி, 9:90:1,2) என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. முன்னோர்கள் காக்கையைக் கொண்டு நிமித்தம் பார்த்தது போலவே, ஆந்தையைக் கொண்டு நிமித்தம் பார்த்துள்ளனர். ஆந்தை அலறினால் தீய நிமித்தமாகக் கருதியதை, **'அஞ்சுவரு குராஅற் குரலுந் தூற்றும்'** (சங்க இலக்கியம்,2163,புறம்,280:5) என்னும் பாடலடி குறிப்பிட்டுள்ளது. எனவே, பறவைகள் ஒலிக்கும் சூழலைப் பொறுத்து, அதனை நன்னிமித்தமாகவும் தீய நிமித்தமாகவும் கொண்டிருந்ததை அறியமுடிகிறது.

பறவைகளில் சில வலமிருந்து இடமும், இடமிருந்து வலமும் செல்வது நிமித்தமாகக் கருதியுள்ளனர். அந்த வகையில் மயில் முதலான பறவைகள் வலப்புறமாகச் செல்வது நல்ல நிமித்தமாகவும் காக்கை முதலான பறவைகள் இடப்புறமாகச் செல்வது தீய நிமித்தமாகவும் கருதியுள்ளதை,

"ஏகும் அளவையின் வந்தன வலமும் மயில் இடமும்
காகம் முதலிய முந்திய தடை செய்வன கண்டான்" (கம்ப.1267:1,2)

என்னும் பாடலடிகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஒரு தொழிலைத் தொடங்கும்போது கழுகு வட்டமிடுவது நல்ல நிமித்தமாகப் பார்க்கப்படுகிறது. குறிப்பாகத் தற்காலத்தில் குடமுழுக்கு நடத்தும்போது கருடன் வட்டமிடுவது நல்ல நிமித்தமாகக் கருதி, அந்நேரத்தில் கலசத்தில் தண்ணீரை ஊற்றுவதைக் காணமுடிகிறது. மேற்கூறிய நாள் நிமித்தம், புள் நிமித்தம் தவிர இயற்கை, விலங்குகள், மக்கள் முதலானவற்றின் வாயிலாக வெளிப்படும் பல்வேறு நிமித்தத்தைப் பிறவற்றின் நிமித்தம் என்றே தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

இயற்கை வழியாகச் சில நிமித்தங்களை அறிந்துள்ளனர். மேகங்கள் இரத்த மழை பொழிதல், சூரியனைச் சுற்றிப் பரிவேடம் கொள்ளுதல், பூமி அதிர்ச்சி அடைந்து நடுங்குதல், இடிகள் மேலே விழுதல் ஆகியவையால் தீய நிமித்தங்கள் தோன்றும் என்பதை,

"குருதிமா மழை சொரிந்தன மேகங்கள் குமுறி
"பருதி வானவன் ஊர்வளைப் புண்டது பாராய்" (கம்ப.**2944:1,2)**
'உலகமும் கம்பிக்கும் உயர்வான், இடியும் வீழ்ந்திடும்' (கம்ப.**2946:2,3)**

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இங்குக் கூறியுள்ள இயற்கைக்கு முரணான நிமித்தங்களை 'உற்பாதம்' என்றும் அழைப்பதுண்டு.

விலங்குகள் கத்துதல், அவை குறுக்கே செல்லுதல், அதனுடைய செயல்கள் மூலம் நிமித்தங்களை அறிந்துள்ளனர். நாய், நரி ஆகியவை ஒன்று சேர்ந்து ஊளையிடுதல் தீய நிமித்தமாகக் கருதப்பட்டதை, **"ஞாளியோடு நின்று உளைக்கின்ற நரிக்குலம் பலவால்"** (கம்ப.2945:4) என்று கூறப்பட்டுள்ளது. குரங்கு, பாம்பு, மூஞ்சூறு, பன்றி, கீரி, கலைமான், அட்டை, எலி, காட்டுப் பசு, பூனை, புலி, உடும்பு இவையெல்லாம் வலமிருந்து இடமாகச் செல்லுதலை நல் நிமித்தமாக அறப்பளீசுர சதகம் 62ஆம் பாடல் கூறியுள்ளது. பெண் யானைகளெல்லாம் மதநீரைச் சொரிதல், ஆண் யானைகளின்

தந்தங்கள் ஒடிந்து விழுதல் ஆகியவற்றை தீய நிமித்தங்களாகக் கம்பராமயணம் 2946ஆம் பாடல் குறிப்பிட்டுள்ளது.

பல்லி வீடுகளில் வாழக்கூடிய ஓர் உயிரினமாகும். மக்கள் இவ்வுயிரியைத் தெய்வமாக வழிபடுகின்றனர். அதனால் பல்லி ஒலித்தலைக் கொண்டு நிமித்தம் பார்க்கும் பழக்கமானது பண்டைய காலந்தொட்டு இருந்து வருகிறது. அதற்குக் காரணம் மக்கள் இதன் ஒலி எழுப்புதலை எச்சரிக்கை செய்வதாய் நினைக்கின்றனர். இதன் ஒலியைப் கவுலி அடித்தல் அல்லது கவுலி சொல்லுதல் என்று பேச்சு வழக்கில் கூறுவர். பல்லி ஒலித்த திசை நல்ல நிமித்தமாகக் கருதியதை, **'பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்'** (சங்க இலக்கியம்,281,அகம்.88:3) என்னும் பாடலடி கூறியுள்ளது. பல்லி ஒரு பக்கத்திலிருந்து பல முறை ஒலித்ததைத் தீ நிமித்தமாகக் கருதிய பன்றி தான் போகும் வழியில் செல்லாமல் மாற்று வழியில் சென்றது என்பதை,

"நூலை நுழையும் பொழுதிற் றாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டெடன
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து" (மேலது,290, நற்.98:4-6)

என்னும் பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன. இன்றளவும் மக்கள் நல்ல செய்திகளைப் பேசிக் கொண்டிருக்கும்போது பல்லி ஒலித்தலை வைத்து அச்செய்தியின் நன்மை, தீமைகளை அறிவதைக் காணமுடிகிறது.

மனிதர்களின் செயல்கள் வழியாகவும் நிமித்தம் பார்த்துள்ளனர். மனிதரின் உடலுறுப்புகள் சில நேரங்களில் துடிக்கும். அதாவது, பெண்களின் இடக்கண்ணும் இடத்தோளும் துடித்தல் நல்ல நிமித்தம் நிகழும் என்பதை, **'ஏழையர், தோளுமங் கிடவயிற் றுடித்த'** (சூளாமணி,9:88:2,3) என்றும் நற்செயல் நினைத்த பொழுது தும்முதல் என்பது தீய நிமித்தத்தைக் குறிக்கும் என்பதை, **'துணைகதிர் முகந்தென முகப்பத் தும்மினான்'** (சீவகசிந்தமாணி,323:3) என்றும் கூறுவதன்மூலம் விளங்கிக் கொள்ளமுடிகிறது.

மனிதர்களுடைய தூக்கத்தில் நிமித்தங்கள் வெளிப்பட்டுள்ளன. அதனைக் கனவு என்பர். கனவில் நல்லது நிகழ்ந்தால் கெட்டது நடக்கும். கெட்டது கனவில் வந்தால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்து வருகிறது. இதுபோன்ற நிமித்தங்கள் பல மக்கள் வாழ்வியலில் இருந்து வருவதை அறியமுடிகிறது.

**உன்னம் பார்த்தல்**

உன்னம் என்பது ஒரு வகை மரமாகும். இம்மரத்தை இலவமரம் என்று கூறுகின்றனர். இவ்வுன்னமரத்தின் பூ பொன்னிறத்திலும் அதன் இலை சிறிய அளவிலும் இருப்பதை, **'பொன்னி னன்ன பூவிற் சிறியிலை'** (சங்க இலக்கியம்,924,பதிற்.61:5) என்னும் பாடலடி கூறியுள்ளது. முன்னோர்கள் போருக்குப் போகும் முன்பு இம்மரத்தைக் கொண்டு நிமித்தம் பார்த்துள்ளனர். இம்மரத்தைப் பார்க்கும்பொழுது அதன் இலை நன்றாகத் தழைத்திருக்குமாயின் போரில் வெற்றி கிடைப்பதும் அதுவே அம்மரத்தின் இலை கருகி வாடியிருக்குமாயின் தோல்வியுறுவதும் நிமித்தமாக அறியப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் போர் என்பது மன்னர்களின் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்ததால் சில நேரங்களில் உன்னமரம் வாடியிருந்தும் மன்னர்கள் போருக்குச் செல்வதுண்டு.

தொல்காப்பியப் புறத்திணையியல் 5ஆம் நூற்பாவில் **'உன்னநிலை'** என்று கூறப்பட்டுள்ளது. உன்னநிலை என்பது உன்ன மரத்தைக் கொண்டு நிமித்தம் அறிதலோடு மன்னனுடைய புகழும் பேசப்படும் ஒரு புறத்துறையாகும். இதனை,

"துன்னருஞ் சிறப்பிற் றொடுகழற் மன்னனை
உன்னஞ் சேர்த்தி யுறுபுகழ் மலிந்தன்று" (புறப்பொருள் வெண்பாமாலை,243)

என்று கூறுவதன்மூலம் விளங்கிக் கொள்ளமுடிகிறது. எனவே, மன்னர்கள் உன்னமரத்தின் வழியாக நிமித்தம் பார்த்த பிறகே போருக்குச் சென்றுள்ளனர் என்பது தெளிவாகிறது.

### விரிச்சி கேட்டல்

விரிச்சி என்பதற்கு, **'வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பது'** என்று பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது (வித்தியானந்தம், 1971, பக்.196). அதாவது, ஒருவர் காரியம் தொடர்பாக நினைத்திருக்கும் நேரத்தில் அக்காரியம் நன்மை அல்லது தீமையில் முடியும் என்பதை அயலார் தற்செயலாகப் பேசிக் கொள்ளும் சொற்களால் அறியும் ஒருவகை நிமித்தமே விரிச்சி கேட்டல் என்பதாகும். அதனால், இதற்கு **வாய்ச்சொல்** என்ற பெயரும் வழங்கப்படுகிறது. பழங்காலத்தில் மக்கள் நற்சொல் கேட்பதற்காவே இந்நிமித்தத்தைப் பார்த்துள்ளனர். அதனால் இதற்கு **நற்சொல், நன்னிமித்தம்** என்ற பெயர்களிலும் வழங்கப்பட்டுள்ளன. இந்நிமித்தத்தை ஆண் பெண்ணென இருபாலாரும் பார்த்துக் கூறுபவர்களாக இருந்துள்ளனர். இந்நிமித்தம் பார்த்துக் கூறும் ஆண்களை, **'விரிச்சிகன்'** (சீவகசிந்தாமணி,621:2) என்று அழைத்துள்ளனர்.

முன்னோர்களிடம் விரிச்சி பார்க்கும் பழக்கம் பரவலாக நிலவியுள்ளது. **'ஒருசார்த், திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப'** (சங்க இலக்கியம், 1193,நற்.40:3,4) என்னும் பாடலடிகளில் தலைவனைச் சூழ்ந்து மகளிர் விரிச்சி கேட்டு நின்றார்கள் எனக் கூறப்பட்டுள்ளன. குறிப்பாகப் போருக்குச் செல்லும் முன்பு விரிச்சி பார்க்கும் பழக்கம் இருந்துள்ளது. இதனை, **'பாக்கத்து விரிச்சி'** (தொல்.பொருள்.58:1) என்னும் நூற்பா அடி கூறுகிறது. இதன் பொருள் போருக்குச் செல்லும்முன் வீரர்கள் சிற்றூர் சென்று அவ்விடத்தில் உள்ளோர் கூறும் வாய்ச்சொல்லைக் கேட்பது என்பதாகும். இலக்கண விளக்கப் புறத்திணையியல் 232ஆம் நூற்பாவில் **'பறவாப்புள்'** என்றொரு சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு வெட்சி வீரரால் கைப்பற்றப் பட்ட ஆநிரைகளை மீட்கக் கரந்தை வீரர்கள் பயணம் மேற்கொள்ளும்போது, வெற்றி தோல்விகளைப் பற்றி முன்னரே அறிய நிமித்தத்திற்குரிய சொற்களைக் கேட்டனர் என்பது பொருளாகும்.

போருக்குச் சென்ற தலைவன் காலம் தாழ்த்தும்போது விரிச்சி பார்க்கும் பழக்கம் இருந்துள்ளது. போருக்குச் சென்ற தலைவன் வராத நிலையில் அவன் வருகைக்காகத் தலைவி வருத்தத்துடன் காத்திருக்கிறாள். அந்நேரத்தில் வயது முதிர்ந்த பெண்டிர் ஊரின் புறத்தே சென்று ஓரிடத்தில் நெல்லையும் மலரையும் தூவித் தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்பர். இதனை விரிச்சி கேட்கக் காத்திருந்தனர் என்பர். இதனை,

> "பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
> யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
> யாழிசை யினவண் டார்ப்ப நெல்லோடு
> நாழி கொண்ட நறுவீ முல்லை
> யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
> பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (சங்க இலக்கியம்,1094,முல்லை.6-11)

என்ற பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன.

நற்சொல்லானது கூடியிருப்பவர்களில் சிலர் தற்செயலாக வாயால் பேசும் சொற்களாகும். அச்சொற்கள் நன்மை விளைவிக்கக் கூடியதாகவும் தீமை உண்டாக்கக் கூடியதாகவும் இருந்துள்ளன.

> "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
> னுறுதுய ரலமர னோக்கி ஆய்மக
> ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
> கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
> வின்னே வருகுவர் தாய ரென்போ
> ணன்னர் நன்மொழி கேட்டனம்" (மேலது,1094,முல்லை.12-17)

என்னும் பாடலடிகளில் இளங்கன்றுகள் பசியின் கொடுமையை நினைத்து வருந்திருக்கும் நேரத்தில் ஆய்மகள் ஒருத்தி உன் தாயை இப்பொழுதே கோவலர் ஓட்டி வருவர் என்று கூறினாள். அதனைக் கேட்ட முதுபெண்டிர் நல் நிமித்தமாகக் கருதினாள்.

நற்சொல் கேட்ட முதுபெண்டிர் தலைவியிடம் வந்து போருக்குப் போன தலைவன் வெற்றியோடு வருவான் என்று உரைக்கின்றாள். இதனை,

"நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது" (மேலது,1094,முல்லை.18-21)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இங்கு வாய்ப்புள் என்பது வாயால் கூறுகின்ற நன்னிமித்தத்தைக் குறிப்பதாகும்.

விரிச்சி கேட்டலில் நற்சொற்களைக் கேட்டும் அது தீமை தரக்கூடியதாகவும் இருந்துள்ளது. இதனை,

"நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்குஞ்
செம்முது பெண்டின் சொல்லும்" (மேலது,2163, புறம்.280:6,7)

என்னும் பாடலடிகள், முதுபெண்டிர் நெல்லும் நீரும் எறிந்து போருக்குச் சென்ற வீரன் பிழைத்து வருவான் என்று கூறிய நற்சொல் இன்று குறைபாடு ஆனது என்று குறிப்பிட்டுள்ளன.

தெய்வத்தை வணங்கி விரிச்சி கேட்டல் போலவே சில நேரங்களில் தற்செயலாக இருவர் பேசிக் கொள்வதும் விரிச்சியாகக் கருதப்பட்டுள்ளது. இதனை, **"போமென் வாய்ச்சொற் கேட்பினும்"** (கல்லாடம்,43:11) என்ற பாடலடியில் அயலார் பேசிக்கொள்ளும்போது, 'போவான்' என்று கூறக் கேட்பது தீய நிமித்தமாகக் கருதப்பட்டதன்வழி அறியமுடிகிறது.

குறுந்தொகை 218ஆம் பாடலில் தலைவியானவள் பிரிந்து சென்ற தலைவன் நம்மை மறந்தான் போலும் என்று நினைக்கிறாள். இதனால் அவன் வருவானா? என்று நிமித்தம் பார்த்தலால் என்ன பயன் என்று கேட்பது போல் அமைந்திருக்கும்.

சில நேரங்களில் விரிச்சி கேட்காமலும் இருந்துள்ளனர். அதாவது, தலைவியானவள் பிரிந்து சென்ற தலைவன் தன்னை மறந்தார் போலும் என்று நினைக்கிறாள். அதனால் அவள் வருத்தமடைந்து தலைவன் வருவாரா? என்று விரிச்சி கேட்காமலும் இருந்துள்ளாள். இதனை, **'விரிச்சியு நில்லாம்'** (சங்க இலக்கியம்,1268,குறுந்.218:3) என்ற பாடலடி குறிப்பிட்டுள்ளது. மேற்கூறியவற்றிலிருந்து தலைவனைப் பிரிந்த தலைவி அவனின் வருகையை அறிந்துகொள்ளவே விரிச்சி பார்க்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

**வான்மொழி**

வான்மொழியாலும் நிமித்தம் பார்க்கப்பட்டுள்ளது. இதனை, 'அசரீரி' என்றும் அழைக்கின்றனர். இந்த அசரீரிக்கு உருவம் கிடையாது. அதன் ஒலியை மட்டும் காதால் கேட்கமுடியும். அது வானில் தோன்றி வாக்கினை வெளிப்படுத்தும். திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றம் செய்த பொழுது அசரீரி வானில் இருந்து பாராட்டியதை,

**"உருத்திர சன்ம ரெனவுரைத்து வானி**
**லொருக்கவோ வென்றதோர் சொல்"** (திருவள்ளுவமாலை,1:3,4)

என்று திருவள்ளுவமாலை குறிப்பிட்டுள்ளது.

சீவக சிந்தாமணியில் சீவகன் பிறந்திருந்த பொழுது மரக்கிளையின் மறைவில் ஏதோ ஒரு குரல் தெய்வத்தால் 'சீவிப்பாயாக' என்று வாழ்த்தியதை, **'சினைமறைந் தொருகுரல் சீவ வென்றதே'** (சீவகசிந்தாமணி,323:4) என்னும் பாடலடி கூறுவதன்மூலம் அறியலாம்.

**கட்டுப் பார்த்தல்**

குறி பார்த்தலில் கட்டுப் பார்த்தல் என்பதும் ஒன்றாகும். இந்தக் கட்டு என்னும் சொல்லைத் தொல்காப்பியக் களவியல் 24ஆம் நூற்பா குறிப்பிட்டுள்ளது. இச்சொல்லுக்கு **'நிகழ்வது சொல்லுங் குறி'** (தமிழ்ப் பேரகராதி, பக்.651) என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. **"நென்முன் னிறீஇக், கட்டிற் கேட்கு மாயின்"** (சங்க இலக்கியம்,1143,நற்.288:6,7) என்னும் பாடலடிகள் முறத்தில் நெல்லைப் பரப்பி வைத்து அதிலுள்ள நெல்லினை எண்ணினவழி அறிந்த செய்தியைக் கட்டுப் பார்த்தல் மூலம் தெரிந்து கொள்வதைக் குறிப்பிட்டுள்ளன. நெல் தவிர அரிசி, தினை, சோழி முதலானவையும் கட்டுப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

கட்டு வைத்துப் பார்த்தலானது பண்டைய சமூகத்தில் பரவலாக இருந்துள்ளது. குறிப்பாகத் தலைவன்பால் களவில் ஈடுபட்ட தலைவிக்கு உடல் மெலிந்திருக்கும். தாயானவள் தன் மகளின் மெலிவிற்கான காரணம் யாதென அறிவதற்காகக் கட்டுப் பார்த்துள்ளாள்.

கட்டு வைத்துப் பார்ப்பவர் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் பல பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளதை இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. அகநானூற்றில், **'முதுவாய்ப் பெண்டிர்'** (மேலது,2271,அகம்.22:7) என்று கூறப்படுவதற்குப் பின்நிகழ்வை முன்னதாக உரைக்கக்கூடிய பெண்டிர் எனப் பொருள்படும். குறுந்தொகையில், **'அகவன் மகள்'** (மேலது,626,குறுந்.23:1) என்று குறிப்பிட்டுள்ளதற்கு அவள் தெய்வங்களை அழைத்துக் கூறுவதால் இப்பெயர் பெறுகிறாள். பெருங்கதையில், **'கட்டறி மகடூஉ'** (பெருங்கதை,1:37:236) என்றும் கல்லாடத்தில் **'குறத்தி'** (கல்லாடம்,7:11) என்றும் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழில், **'கொடிச்சியர்'** (திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்,80:5) என்றும் கச்சிக் கலம்பகத்தில், **'குறமகள்'** (கச்சிக் கலம்பகம்,90:4) என்றும் திருக்கோவையாரில் **'கட்டுவித்தி'** (திருக்கோவையார், 285,கொளு) என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். சில நேரங்களில் ஆண்களும் குறி சொல்லியுள்ளனர். அவர்களைக் **கட்டுக்காரன்** (தமிழ்ப் பேரகராதி, பக்.651) என்று அழைத்துள்ளனர்.

கட்டுப் பார்க்குமிடம் களம் என அழைக்கப்பட்டுள்ளது. களத்திற்குக் குறி பார்க்கும் பெண்டிரை அழைத்து வருகிறாள் தாயானவள். பொதுவாக, எந்த ஒரு தொழிலைத் தொடங்கினாலும் இறையை வழிபடுவது மரபாக இருந்து வருகிறது. குறி சொல்லக்கூடிய பெண்டிரும் குறி சொல்வதற்குமுன் முருகப்பெருமானை நினைத்து மனமுருகிப் பாடலைப் பாடுகிறாள். அம்மகளிர் முருகப்பெருமானை வாழ்த்தினது குறுந்தொகை 23ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது. அந்தப் பாடல் மலையில் வீற்றிருக்கும் முருகனையும் அந்த ஊரில் இருக்கும் தலைவனையும் பாடுவதாக அமைகிறது. இப்பாடலைக் கேட்ட தலைவி புன்முறுவல் புரிகிறாள். தலைவி அக இன்பம் அடைந்ததை அறிந்த தோழி குறி சொல்லும் மகளிரைப் பார்த்து அந்த மலையை மீண்டும் மீண்டும் பாடுமாறு கூறுவதாக அமைந்துள்ளது.

இறைவனை வழிபட்ட பின் முறத்தில் அரிசியைப் பரப்பி வைத்தலை, **'முதுவாய்ப், பொய்வல் பெண்டிர் பிரப்புளர்பு இரீஇ'** (சங்க இலக்கியம்,2272, அகம்.98:8,9) என்னும் பாடலடி உணர்த்துகிறது. இங்குப் பிரப்பு என்பது குறுணி என்னும் அளவு உடையதாகும். அவ்விடத்தில் தாயானவள் மகளை அழைத்து வந்து நிறுத்துகிறாள். அப்பெண்டிரிடம் கட்டுப் பார்த்து மகளின் நிலையைச் சொல்லுமாறு கேட்கிறாள் தாயானவள். இந்தக் கட்டுக் கேட்கும் முறையானது **குறி கேட்டல்** என்றும் **கட்டுப்படுத்துதல்** என்றும் அழைக்கப்படுகிறது.

குறி சொல்பவர் தெய்வ ஆவேசங் கொண்டு முறத்தில் சில நெற்களை எடுத்து வீசி எறிகிறாள். இதனை,

> "காரார்குழல் கொண்டை கட்டுவிச்சி கட்டேறிச்
> சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா" (நாலாயிர திவ்ய பிரபந்தம்,3784-9)

என்னும் பாடலடிகள் கூறியுள்ளன. இங்குக் கட்டுவிச்சி என்பது குறி பார்த்துக் கூறுபவளைக் குறிக்கும். அவள் வீசி எறிந்த நெல்லை எண்ணிக் கணக்கிட்டுக் குறி கூறுவாள். அவள் அதனைப் பார்த்துக் குறி உரைத்தலை, **'கட்டுச் சொல்லுதல்'** (தமிழ்ப் பேரகராதி, பக்.652) என்று அழைக்கப்பட்டுள்ளது. அவள் குறி சொல்லி முடித்த பின்பு வெறியாட்டு நிகழ்த்துவர். கட்டுப் பார்த்தவுடன் வெறியாட்டு நிகழ்த்தியதை, அகநானூறு 33ஆம் பாடல் தெரிவிக்கிறது.

இவ்வாறான கட்டுப்பார்த்தலானது சிற்சில மாற்றங்களுடன் சிற்றிலக்கியம் தோன்றிய காலத்தில் நிகழ்ந்துள்ளது. இதனைக் கலம்பகத்துள் ஒரு துறையாகக் குறம் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குறமானது குறத்தி, தலைவி தான் காதலித்த தலைவனின் வாய்ப்புகளை அறிந்து குறியாக எடுத்துக் கூறுவதை எடுத்துரைக்கிறது. இக்குறமே பின்னர்க் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியமாக வளர்ச்சியுற்றது. குறவனின் மகளே குறவஞ்சி ஆவாள். இவள் குறப்பெண் என்று சுட்டப்படுகிறாள். இவள் மலைவாழ் மக்களின் குடியில் பிறந்ததால் இப்பெயர் பெறுகிறாள். இவளை முதன்மைப் பாத்திரமாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டதால் இவள் பெயரே இந்நூலுக்குப் பெறலாயிற்று. இக்குறவஞ்சிக்கு இலக்கணமும் வகுக்கப்பட்டுள்ளது. இதனை,

"இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப்பாட்டே" (பன்னிரு பாட்டியல்,336)

என்ற நூற்பாவில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலத்திற்குரிய நிகழ்வுகளைத் தெளிவாக எடுத்துரைப்பது குறத்திப்பாட்டு எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, குறி கூறுவதாக இயற்றப்படும் நூல் வகை குறவஞ்சி என்பது தெளிவாகிறது.

இக்குறவஞ்சி நூலில் உலா வந்த தலைவனைக் காதலித்து ஏக்கமுற்று இருக்கும் தலைவியின் நிலைமை அறிந்து அவளுக்குக் குறி சொல்வாள் குறவஞ்சி. அவள் குறி சொல்வதில் பலவகை உண்டு. அவற்றுள் கைக்குறியும் ஒன்றாகும். இக்குறியைக் கும்பேசர் குறவஞ்சி 55ஆம் பாடல் குறிப்பிட்டுள்ளது. கைக்குறி என்பது கையில் உள்ள ரேகை பார்த்து அறிவதாகும். இவ்வாறான குறி பார்க்கும் முறை இன்றளவும் இருந்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கூறியவற்றிலிருந்து கட்டுப் பார்த்தல் என்பது தலைவனால் காம நோய்க்கு ஆட்பட்ட தலைவியின் நிலைமையை அறிந்து அவற்றினைத் தீர்ப்பதற்காகப் பார்க்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

**கழங்கு பார்த்தல்**

**கழங்கு** என்பது கழற்சிக்காயைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். இதற்குக் **'கழல்'** என்ற பெயருமுண்டு. இக்காய் இருப்பை மரத்தின் பூ நிறத்தில் இருக்கும் என்பதை, **'ஆடுதளி ரிருப்பைக் கூடுகுவி வான்பூக், கோடுகடை கழங்கின்'** (சங்க இலக்கியம்,1529,அகம்.135:8,9) என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் காய் வெண்ணிறமான முத்துக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதை, **'கழங்குறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்'** (மேலது,1353,அகம்.126:12), என்னும் பாடலடியால் அறியலாம்.

பழந்தமிழர் கழங்கு என்னும் காயைப் பல வகையில் பயன்படுத்தியுள்ளனர். பொய்ப்புலியின் கண்ணுக்குப் பொருத்தப்பட்டதை, **'கன்முகை வயப்புலி கழங்குமெய்ப் படூஉ'** (மேலது,791ஐங்.246:2) என்றும் எண்ணுவதற்குப் பயன்படுத்தியதை, **'எல்லா மெண்ணி னிடுகழங்கு தபுந'** (மேலது,1056,பதிற்.32:8) என்றும் கூறியுள்ளன. குறிப்பாக, இக்கழங்கினைக் கொண்டு இளம் பெண்கள் விளையாடினர் என்பதை, **'குறுந்தொடி மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்'** (மேலது,194,புறம்.36:3,4) என்னும் பாடலடியால் விளங்கிக் கொள்ளமுடிகிறது. பிற்காலத்தில் தோன்றிய பிள்ளைத் தமிழில் பத்து வகைப் பெண்பாற்குரிய பருவங்களுள் ஒன்றாக இந்தக் கழங்கு இடம்பெற்றுள்ளது. இக்கழங்கு மகளிர் கழங்கு விளையாடும் பருவத்தைக் குறித்தலாகும்.

இவ்வாறான கழங்கைக் கொண்டு முன்னோர்கள் குறி பார்த்தலுக்கும் பயன்படுத்தினர். அதனால், இக்கழங்கின் பெயரே இக்குறி பார்த்தலுக்கும் பெயராயிற்று. குறிப்பாகத் தலைவனால் தலைவிக்குக் காம நோயான பசலை ஏற்படும்போது கழங்கு கொண்டு குறி பார்த்தலைப் பண்டைய இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

தலைவிக்கு ஏற்பட்ட நோயைக் கழங்கின் மூலம் அறிவதற்குமுன் முருகனுக்குரிய வெறியாட்டு நிகழ்த்துவர். வெறியாட்டை வெறி என்ற பெயரிலும் அழைத்துள்ளனர். வெறியாட்டு நிகழ்த்துவதற்குரிய இடத்தை முதலில் தேர்வு செய்வர். அவ்விடம் களம் என அழைக்கப்படுகிறது. அதை நற்றிணையில் **'வெறிமனை'** (மேலது,1713,நற்.34:9) என்றும் திருமுருகாற்றுப்படையில், **'வெறியயர் களன்'** (மேலது,1380,திருமுரு.222) என்றும் கல்லாடத்தில், **'முன்றில்'** (கல்லாடம்,24:3) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. முன்றில் என்பது வீட்டின் முன்பகுதியைக் குறிக்கும். இங்கு

வெறியாட்டுக்களத்தைக் குறிக்கிறது. வெறியாட்டு நிகழ்த்த தேர்வு செய்த இடத்தில் மணலைப் பரப்பி அவ்விடத்தை மலர் மாலை முதலியவற்றால் அழகுபடுத்துவர். இதனைக் **'களன் இழைத்தல்'** என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளனர். பின்னர் அவ்விடத்தில் இசைக்கருவிகளை முழங்கச் செய்வர். அவை **'வெறியாட்டுப்பறை'** என்று அழைக்கப்பட்டுள்ளது.

வெறியாட்டு நிகழ்த்தக்கூடியவன் வேலன், வேல்மகன் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறான். அவன் முருகனை முழுமுதல் கடவுளாக வழிபடுவதால் இப்பெயர் பெறுகிறான். அவன் பின்னர் நிகழக்கூடியதை முன்னரே கூறும் பேரறிவுடையவன் என்பதை, **'ஆகுவ தறியு முதுவாய் வேல'** (சங்க இலக்கியம்,968, அகம்.195:14) என்னும் பாடலடி கூறியுள்ளது. இவ்வேலன் வெறியாட்டு நிகழ்த்துவதால் **'வெறியாட்டாளன்'** என்ற பெயர் பெறுகிறான். ஐங்குறுநூறு, **'முதுவேலன்'** (மேலது,790,ஐங்.245:1) என்ற பெயரைக் குறிப்பிட்டுள்ளது. இப்பெயருக்கு 'வயது முதிர்ந்தவன்' என்பது பொருளாகும். வயது முதிர்ந்தவர் அறிவிலும் அனுபவத்திலும் சிறந்தவர்களாக இருப்பர். இவ்வேலனுக்குப் **படிமத்தான்** என்ற பெயரும் வழங்கப்படுகிறது. இவன் தலைவியின் நோயினைத் தணிவிப்பதற்காகப் படிமத்தைக் கையிலே எடுத்து வருவதால் இப்பெயர் பெறுகிறான்.

இவ்வாறான பல பெயர் பெற்றுள்ள வேலனைத் தலைவியினுடைய தாய் வெறியாட்டு நிகழ்த்துமிடத்திற்கு அழைத்து வருகிறாள். இதனை,

"பொய்ம்மணல் முற்றங் கடிகொண்டு
மெய்ம்மலி கழங்கின் வேலற் றந்தே" (மேலது,2273,நற்.268:7,8)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

மற்றொரு பாடலில் அலர் மிகுதியால் தலைவன் தலைவியை அழைத்துச் சென்று விடுகிறான். தலைவி சென்றதற்கு வருந்திய நற்றாய் வேலனை அழைத்துத் தலைமகன் என்ன நினைக்கிறான் எனக் கழங்கினைப் பார்த்து எனக்குக் கூறுவாயாக? என்று வினவுகிறாள். இதனை, **'கூறுக மாதோநின் கழங்கின் திட்பம்'** (மேலது,968, அகம்.195:15) என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

வேலனிடம், தாயானவள் தலைவிக்குத் தலைவனால் ஏற்பட்ட நோயைத் தீர்க்க எடுத்துரைக்கிறாள். வேலன், முருகனுக்கு ஆட்டினை அறுத்தல், மலர் தூவுதல், நறுமணப் புகை உண்டாக்குதல் முதலானவற்றைச் செய்து வழிபடுகிறான். இது **'வெறியயர்தல்'** என அழைக்கப்பட்டுள்ளது. அப்பொழுது அவன் முருகனைத் துதித்துப் பல்வேறு பாடல்களைப் பாடுவான். அப்பாடல்கள் வெறியாட்டுப் பாடல்கள் என அழைக்கப்படும். பின்னர் வேலன் முற்றத்தில் கழற்சிக்காய்களைப் பரப்புகிறான். அவற்றினை எண்ணிப் பார்த்துக் குறி சொல்லத் தொடங்குதலை, **'கழங்கு மெய்ப்படுத்துதல்'** (மேலது,790,ஐங்.245:2) என்றும் **'கழங்கு படுத்துதல்'** (மேலது,794,ஐங்.249:1) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. அப்பொழுது முருகனின் அருள் அவ்வேலனின் மேல் எழுந்தருளி ஆவேசங் கொண்டு ஆடுகிறான். பின்னர்த் தாயிடம் தலைவிக்கு வந்த நோய் முருகனால் வந்தது எனக் கூறுகிறான். அவன் முருகனை வழிபட்டுக் கழங்கினைக் கொண்டு முருகனின் அருளால் பெற்ற அவ்வேலன் கூறும் சொற்களால் தலைவியின் நோய் தணிவது நன்றாம் என்பதை,

"அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியிற் றணியின் நன்றுமன்" (மேலது,1462,நற்.282:5,6)

என்ற பாடலடிகளால் அறியமுடிகிறது. தலைவிக்கு வந்த நோயோ தலைவனால் வந்தது. இங்கே, முருகனால் வந்தது எனப் பொய் சொன்ன அக்கழங்கினைப் பொய்த்தல் அறியாத கழங்கு எனப் பாராட்டுகிறாள் தோழி. இதனை, **'பொய்படு பறியாக் கழங்கே'** (மேலது,795,ஐங்.250:1) என்னும் பாடலடியால் அறியலாம். அதனால் இது தெய்வத்தால் அறியப்படும் கழங்கு அம்மாறுபாட்டைக் காட்டும் என்பதை, **அணங்கறி கழங்கிற் கோட்டங் காட்டி'** (மேலது,1469,நற்.47:8) என்னும் பாடலடி குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான கழங்கு பார்த்தலானது பின்னாளில் வெறி விலக்குதல் எனக் கலம்பகத்தின் உறுப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளது. விலக்குதல் என்பது விலக்கி விடுதல் என்று பொருள்படும்.

**ஆழியிழைத்தல்**

ஆழி என்னும் சொல் கடல், மோதிரம், சக்கரம் முதலான பல பொருள்களைக் குறிக்கும். பல பொருளைக் குறிக்கும் இச்சொல் நிமித்தத்தைக் குறிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. இச்சொல்லுக்கு, **“கணவனைப் பிரிந்த மனைவி இழைக்குங் கூடற்குழி”** (தமிழ்ப் பேரகராதி, பக்.253) என்று பொருள் விளக்கம் தருவதன்வழி அறியலாம். அதாவது தலைவன் போருக்கோ அல்லது பொருள் ஈட்டுவதற்காகவோ தலைவியை விட்டு நீண்ட நாள் பிரிந்திருக்கிறான். தலைவி, தலைவனுடைய பிரிவைத் தாங்கமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாள். அந்நேரத்தில் தலைவி அவன் விரைவில் வருவானா? என்பதை அறிய விரும்புகிறாள். அதற்காக அவள் கண்ணை மூடிக் கொண்டு விரலால் மணலில் வட்டமாகக் கோடு வரைகிறாள். அக்கோடுகள் ஒன்றாக இணையுமாயின் தலைவன் விரைவில் வருவான் என்பதும் கோடுகள் ஒன்றாக இணைய வில்லையாயின் அவன் வருவது காலம் தாமதமாகும் என்பதும் நிமித்தமாக அறியப்பட்டதைக் காணமுடிகிறது.

இந்த நிமித்தத்திற்கு வேறு விதமான பொருள் உள்ளதை இங்குக் காண்போம். தலைவியானவள் மணலில் விரலால் வட்டமாகக் கோடு வரைகிறாள். அவ்வட்டத்திற்குள் பல கோடுகளைக் கீறுகிறாள். அவள் கீறிய கோடுகளை எண்ணி இரட்டைப்படையாக வந்தால் தலைவன் விரைவில் வருவான் என்பதும் ஒன்றைப்படையாக வந்தால் தலைவன் வருவது காலதாமதாகும் என்பதும் நிமித்தமாகக் கருதப்பட்டதைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிமித்தமானது அக இலக்கிய பாடல்களில் இடம்பெற்றுள்ளது. ஐந்திணை ஐம்பதில் தலைவனோடு சேர விரும்பும் தலைவி ஆழி இழைத்தாள் என்பதை,

> “தாழ்கடற் றண்சேர்ப்பன் றாரகல நல்குமே
> லாழியாற் காணாமோ யாம்” (ஐந்திணையைம்பது,43:3,4)

என்னும் பாடலடிகள் கூறியுள்ளன.

பண்டைய நாளில் இருந்த இந்நிமித்தமானது பக்தி இலக்கியம் தோன்றிய காலத்திலும் இருந்துள்ளது. பெண்கள் இறைவனின் அன்பைப் பெற வேண்டும் என்பதற்காக இந்நிமித்தத்தைப் பார்த்துள்ளனர். சிவபெருமான் மீது அன்பைச் செலுத்தும் பெண்ணொருத்தி மணல் குன்றுக்குச் சென்று கூடல் இழைத்தாள் என்பதை, **‘கூட லாக்கிடுங் குன்றின் மணற்கொடு’** (தேவாரத் திருப்பதிகங்கள்,5872:2) என்று பாடலடி குறிப்பிட்டுள்ளது. ஆண்டாள் அரங்கனுக்குச் சேவை செய்வதற்காகக் கூடல் இழைத்தாள் என்பதை,

> “பள்ளி கொள்ளும் இடத்தடி கொட்டிட
> கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே” (நாலாயிர திவ்ய பிரபந்தம்,534:3,4)

என்னும் நாச்சியார் திருமொழி பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன. இங்கு, **‘கூடல்’** என்பது ஆழியைக் குறிக்கும் வேறு சொல்லாகும். கூடலிழைத்தல் மூலம் நடக்க இருப்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

இக்கட்டுரையில் தொல்காப்பியர் குறிப்பிட்டதன்வழி நிமித்தத்தின் பல்வேறு வகைகள் எடுத்துரைக்கப்பட்டன. நிமித்தம் என்பது தலைமக்கள், மன்னர்கள் போன்றோர் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது என்பதை அறியமுடிந்தது. புள் என்னும் நிமித்தத்தின் வழியாகப் பல பறவைகளின் நிமித்தத்தை அறிந்தனர் என்பது விளக்கப்பட்டுள்ளது. பிரிந்து சென்றவர் மீண்டும் வருதல் பொருட்டு விரிச்சியின் மூலம் நிமித்தம் பார்த்தது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நோய் வந்ததைக் கழங்கின் மூலமும் கட்டின் மூலமும் பார்த்தனர் என்பது ஆராயப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு நிமித்தமும் ஏதோ ஒரு வகையில் பண்டைய தமிழர் வாழ்விலோடு பின்னி பிணைந்துள்ளதை அறியமுடிந்தது. அத்தகைய முன்னோர்கள் பயன்படுத்திய பல

நிமித்தங்கள் இன்று வழக்கிழந்துள்ளன. இவற்றினைத் தொகுத்துப் பார்க்கும்போது சமூக அமைப்பும் கடவுள் நம்பிக்கையும் எண்ண மாற்றங்களும் தான் அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

ஆறுமுக சுவாமிகள் (பதி.). (1921). *அறப்பாளீசுர சதகம்.* சென்னை: ஸ்ரீராமாநுஜம் அச்சுக்கூடம்.

இராகவதாஸன், வி.எஸ்.வி. (பதி.). (2000). *நாலாயிர திவ்ய பிரபந்தம் உரையுடன்.* (முதற்பதிப்பு). சென்னை: முல்லை நிலையம்.

இராகவையங்கார், ரா. (பதி.). (1903). *ஐந்திணையைம்பது.* (முதற்பதிப்பு). மதுரை: தமிழ்ச்சங்க முத்திரா சாலை.

இராகவையங்கார், ரா. (பதி.). (1951). *பன்னிரு பாட்டியல் - மூலம் மட்டும்.* (இரண்டாம் பதிப்பு). மதுரை: மதுரைத் தமிழ்ச் சங்கமுத்திரா சாலை.

இராமநாதன், சுப. (பதி.). (2003). *புறப்பொருள் வெண்பாமாலை.* (மறுபதிப்பு). சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இராமலிங்க தேசிகன், சோம. (பதி.). (1941). *இலக்கண விளக்கம், பொருளதிகாரம் மூலமும் உரையும்.* (முதற்பதிப்பு) Madras: B.N. Press.

இளவழகன், கோ. (பதி.). (2003). *கல்லாடம் மூலமும் உரையும்.* (முதற்பதிப்பு). சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

கலியாணசுந்தரையர், S. (பதி.). (1944). *கும்பேசர் குறவஞ்சி நாடகம்.* (முதற்பதிப்பு). அடையாறு: வசந்தா அச்சுக்கூடம்.

கனகராஜையர், பண்டித நா. (உரை.). (1939). *திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.* (முதற்பதிப்பு). மதுரை: விவேகாநந்தா பிரஸ்.

சாமிநாதையர், உ.வே. (பதி.). (1920). *சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும்.* (இரண்டாம் பதிப்பு). சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம்.

சாமிநாதையர், உ.வே. (பதி.). (1935). *பெருங்கதை.* (இரண்டாம் பதிப்பு). சென்னை: கேசரி அச்சுக்கூடம்.

சாமிநாதையர், உ.வே. (பதி.). (1969). *சீவகசிந்தாமணி.* (ஏழாம் பதிப்பு). சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

சோமசுந்தரனார், பொ.வே. (உரை.). (1970). *திருக்கோவையார்.* (முதற்பதிப்பு). சென்னை: கழக வெளியீடு.

ஞானசம்பந்தன், அ.ச. (பதி.). (2005) *தேவாரத் திருப்பதிகங்கள்.* (ஐந்தாம் பதிப்பு). சென்னை: கங்கை புத்தக நிலையம்.

தாமோதரம் பிள்ளை, சி.வை. (பதி.). (1889). *சூளாமணி.* (முதற்பதிப்பு). சென்னப்பட்டணம்: வித்தியாநு பாலன யந்திரசாலை.

பதிப்பாசிரியர் குழு, (1976). *கம்பராமாயணம்.* (முதற்பதிப்பு). சென்னை: கம்பன் கழகம்.

பவானந்தம் பிள்ளை, ச. (பதி.). (1916). *தொல்காப்பியம் – பொருளதிகாரம் – நச்சினார்க்கினியம் (அகத்திணையியல், புறத்திணையியல்).* (முதற்பதிப்பு). மினெர்வா அச்சுக்கூடம்: சென்னை.

பவானந்தம் பிள்ளை, ச. (பதி.). (1916). *தொல்காப்பியம் – பொருளதிகாரம் – நச்சினார்க்கினியம் (களவியல், கற்பியல், பொருளியல்).* (முதற்பதிப்பு). மினெர்வா அச்சுக்கூடம்: சென்னை.

புஷ்பரத செட்டியார், ஊ. (பதி.). (1800). *கச்சிக்கலம்பகம்.* (இரண்டாம் பதிப்பு). சென்னைபுரி.

பொன்னுசாமி முதலியார் (பதி.), (1842). *திருவள்ளுவ மாலை திருக்குறண்மூலம்*. (முதற்பதிப்பு). ஆமுல்லைவாயில்: நீதிசாரவிளக்க அச்சுக்கூடம்.

வித்தியானந்தன், சு. (1971). *தமிழர் சால்பு*. (இரண்டாம் பதிப்பு). சென்னை: பாரி புத்தகப் பண்ணை.

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பதி.). (1940). *சங்க இலக்கியம் – எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும்*. (முதற்பதிப்பு). சென்னை: சாது அச்சுக்கூடம்.

வையாபுரிப் பிள்ளை, எஸ். (பதி.). (1982). *தமிழ்ப் பேரகராதி (பகுதி – I – VI).* (மறுபதிப்பு). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.